DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW7/PW6

| | | | |
|---|---|---|---|
| Name | மருத்துவர் விக்னேஷ். | Taluk | |
| Father's Name | வடிவேல் | Village | |
| Age | 34 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **25.11.2025.** | | | |

( Accused 1, 2, 3 present)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது நெய்வேலி, என்.எல்.சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி மருத்துவமனையில், கடந்த 08.09.2021 அன்று நான் அவசர சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது, காலை சுமார் 08.00 மணியளவில், சாமிதுரை, த.பெ.சுந்தரமூர்த்தி என்பவரை அவரது உறவினர் தேவக்குமார் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நான் மேற்சொன்ன சாமிதுரையை விசாரித்தபோது, அவர் தன்னை தனக்கு தெரிந்த 3 நபர்கள் மரக்கட்டையால், மேற்சொன்ன தேதியான 08.09.2021 அன்று காலை சுமார் 7.30 மணியளவில் வல்லத்தில் உள்ள அவரது வீட்டிற்கு அருகில் வைத்து தாக்கியதாக சொன்னார். அவரை நான் பரிசோதித்ததில், கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

காயம்-1 : உச்சந்தலையில் 5x1x1 cm, 7x1x1 cm, 6x1x1 cm அளவுள்ள 3 கிழிந்த காயங்கள் காணப்பட்டது.

காயம்-2 : முகத்தின் வலதுபக்கத்தில் வீக்கம் காணப்பட்டது.

காயம்-3 : இடது கைபெருவிரலை நான் தொட்டு பரிசோதித்தபோது, அவர் என்னிடம் வலிப்பதாக சொன்னார்.

காயம்-4 : இரண்டு கால் முட்டிகளிலும் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

காயம்-5 : வலது கைமுட்டியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவர் மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பு, வலிப்பு ஏற்பட்டதாக சொன்னார். ஆனால், மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தபின்னர், அவருக்கு வலிப்பு எதுவும் ஏற்படவில்லை. மேற்படி நபருக்கு மேற்படி மருத்துவமனை விபத்து பதிவேட்டு எண் - 6506 என்ற எண்ணில்

விபத்து பதிவேடு பதிவு செய்தேன். மேலும், மேற்படி நபர் சிகிச்சைக்கு வந்தது சம்மந்தமாக முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னது சம்மந்தமாக மெமோ நெம்பர் 4656 குறிப்பிட்டுள்ளேன்.

2. மேற்படி நபருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்து, மேல்சிசிச்சைக்காக உயர் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். பின்னிட்டு, அவருக்கு, நான் மேற்படி மருத்துவமனையில் அளித்த சிகிச்சையின் அடிப்படையிலும், அவர் கடலூர் கிருஷ்ணா மருத்துவமனை என்கிற தனியார் மருத்துவமனையில் மேல்சிகிச்சை பெற்ற மருத்துவ ஆவணங்களையும், மேற்படி மருத்துவமனையில் அவருக்கு எடுக்கப்பட்ட சி.டி ஸ்கேன், நுண்கதிர்படம் ஆகியவற்றை பார்வையிட்டதன் அடிப்படையிலும், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று எனது கருத்துரை வழங்கி, காயச்சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டின் கூடிய காயச்சான்று அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சி.டி ஸ்கேன், நுண்கதிர்படத்தை நான் பார்வையிட்டதில், எந்த எலும்பு முறிவும் காணப்படாததால், நான் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று மேற்படி காயச்சான்று வழங்கினேன். மேற்சொன்ன நபர், மேற்சொன்ன ஆயுதத்தால், மேற்சொன்ன விதத்தில் தாக்கப்பட்டிருந்தால், மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நான் மேற்படி நபரை பரிசோதித்தபோது, மேற்படி காயங்கள் அனைத்தும் புதிதாக ஏற்பட்டிருந்ததாலும், இரத்தம் வந்துக்கொண்டிருந்ததாலும், மேற்படி காயங்கள் புதிய காயங்கள் என்பதால், மேற்படி காயத்தின் நிறம் மற்றும் வயதை நான் குறிப்பிடவில்லை. மேற்படி நபர், மேற்சொன்ன கிருஷ்ணா மருத்துவமனையில், மேல்சிகிச்சை பெற்றது சம்மந்தப்பட்ட விவரத்தை காயச்சான்றில் நான் ஏன் குறிப்பிடவில்லை என்றால், அப்போது அவசர சிகிச்சை பிரிவில் பல நோயாளிகள் சிகிச்சைக்காக காத்துக்கொண்டிருந்ததால், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அவசரத்தில் குறிப்பிடாமல் விட்டுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**-

மேற்சொன்ன காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள காயங்கள், ஒரு நபர் கட்டிட வேலை செய்யும்போது, தவறி ஒன்றரை ஜல்லி மீது, கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது, மேற்படி சாட்சி சாமிதுரை தனக்கு வலிப்பு இருப்பதாக கூறியதாக எனது முதல் விசாரணையில் நான் கூறியுள்ள நிலையில், அவ்வாறு அவர் பொய்யாக கூட கூறியிருக்கலாம் என்றால், கூறியிருக்கலாம் . போலிசார் கேட்டுக்கொண்டதனால், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை இல்லை.**